விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 207 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 29 சனிக்கிழமை (13.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழில் 90 இலட்சம் ரூபாய் செலவில் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி!

### பாராளுமன்றில் வெளிக்கொணர்ந்தார் வசந்த யாப்பா பண்டார



(கொழும்பு)

நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில் 90 இலட்சம் ரூபாய் செலவில் யாழில் இசை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த 15

## இனவாதக் கட்சிகள் இருக்கும்வரை ஜனநாயகம் தலை தூக்கமுடியாது

### பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் விஜயதாஸ காட்டம்



(கொழும்பு)

இன அடிப்படையில் எமது நாட்டில் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது. அதனால் 02

# குடாநாட்டு மக்களுக்காக அர்ப்பணிப்புடன் உள்ளோம்

## யாழ்.வந்த பிரதமர் தினேஸ் உரை




(யாழ்ப்பாணம்) யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகப் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் வாள்வெட்டு

### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் நேற்று மாலை பேருந்தில் பயணித்த இருவர் பேருந்து சாரதி மீதும் பயணி ஒருவர் மீதும் வாள்வெட்டு தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏ9 வீதியூடாக கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்திலேயே அரியாலை சித்துப் 15

## சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளையால் வட்டுக்கோட்டையில் நிறுவப்பட்ட தேவாரமடத்தை நாளை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைப்பதற்காக சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீ.சிவஞானம் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

(மேலும் செய்தி 6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தடைகள் எதுவுமில்லை

### தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட ரீதியான நிதி ரீதியான தடங்கல்களை எதிர்கொள்ளவில்லை என தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டரீதியான மற்றும் நிதி ரீதியான தடைகள் காணப்படுகின்ற 15

## 165 பேருக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்கள் 165 பேருக்கு நேற்று நிரந்தர நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது. 15

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி

### நேற்றும் 2 மனித உடற்பாகங்களுடன் புலிகளின் சீருடைகளும் மீட்பு



(கொக்குத்தொடுவாய்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின், எட்டாம் நாள் அகழ்வாய்வு செயற்பாடுகள் நேற்றும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய அகழ்வின் போது இரண்டு மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் தகடு ஒன்றும், துப்பாக்கிச் சன்னங்களும், விடுதலைப் புலிகளின் சீருடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு கட்டங்களிலும் அகழ்ந் 15

## படையினரின் கட்டுப்பாட்டில் 3 ஆயிரத்து 571 ஏக்கர் நிலம் உள்ளது

### பிரதமரிடம் யாழ்.மாவட்ட அரச அதிபர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் படையினர் வசம் தற்போதும் 3 ஆயிரத்து 571 ஏக்கர் காணிகள் இருக்கின்றன என்று பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் யாழ்.மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

பிரதமர் தலைமையில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்டத்துக்கான விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தனது வரவேற்பு உரையின் போதே அரச அதிபர் இதனைச் சுட்டிக் காட்டினார்.

இதற்கமைய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இனவாதக்...

ஜனநாயகம் தலைதூக்க முடியாது. அதனால் ஜனநாயகம் தலைதூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சி அமைப்பதைத் தடை செய்ய வேண்டும். அதற்குத் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (12) மதத் தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே கொண்டுவந்த தனிநபர் பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இனவாதம், மதவாதம், அடிப்படைவாதம் இவை அனைத்தும் அரசியலுடன் ஒன்றிப்பிணைந்துள்ளன.இந்த முறைமையை பிரித்தானியர் எமக்கு விட்டுச்சென்றார்கள். தேர்தல் முறைமையே இதற்குக் காரணமாகும்.இன அடிப்படையில் எமது நாட்டில் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது. அதனால் ஜனநாயகம் தலைதூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சி அமைப்பதைத் தடை செய்ய வேண்டும். அதற்குத் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

எமது அண்டை நாடான இந்தியாவில் இனவாத, மதவாத அடிப்படையில் கட்சிகள் இல்லை. அந்த முறையில் எமக்கும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஜனநாயக நாடுகளில் இவ்வாறான முறைமைகள் இல்லை.எமது நாட்டிலிருந்த ஆட்சியாளர்கள் அடிக்கடி அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளும்போது. தங்களின் அல்லது அவர்களின் கட்சியின் நலனுக்காக இந்த இனவாத, மதவாத நடவடிக்கைகளுக்கு இடமளித்தே அதனை மேற்கொண்டுள்ளனர். அதனால் அடிப்படைவாதம் எந்த உருவத்தில் வந்தாலும் அதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது என்றார். (ந-7)

## குடாநாட்டு...

யாழ்.மாவட்டத்தின் விசேட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக உள்ளூராட்சி நிர்வாக பகுதியில் கிராமிய மற்றும் நகர அபிவிருத்திக்கான விசேட ஏற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கியுள்ளோம். பிரதமர் என்ற வகையில் நீங்கள் அனைவரும் அடைந்துள்ள முன்னேற்றத்தை அவதானிக்கவும், வழங்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் நாம் இன்று இருக்கும் இடத்தைப் பற்றிய சில கருத்துக்களைப் பெறவும் இங்கு வருகைதர கிடைத்தமையை பாக்கியமாக கருதுகிறேன்.

சேவைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் உறுதிபூண்டுள்ளனர். எனவே, அபிவிருத்திக்குத் தேவையான அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது இந்தப் பிரதேசத்திற்கு மிகவும் முக்கியமானது.

விவசாயிகளின் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம். அனைத்து விவசாயிகளும் தனியார் துறையை சேர்ந்தவர்கள். உரிமைகளின் அடிப்படையில் அல்லது சிறு விவசாயிகள் என்ற வகையில் அவர்கள் தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு தனிப்பட்ட பங்களிப்பாளர்களாக உள்ளனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்றார். (ந-7)


**WIN REPAIR**

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.

தொடர்புகளுக்கு: 076 834 6136

(1463)

**SB TRAVELS AND TOURS PVT LTD**
**AIR TICKETING AND VISA ARRANGEMENT**

TRAVEL INSURANCE

டுபாய், மலேசியா, இந்தியா, தாய்லாந்து, வியட்னாம் மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கும் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். அத்துடன் சகல நாடுகளுக்குமான விமான பற்றுச்சீட்டுக்களையும் மிகவும் குறைந்த விலையில் எம்மூடாக TRAVELS INSURANCE பெற்றுக்கொள்ளலாம்.

Fares
Colombo - Chennai(RT) - Rs.46800/=
Colombo - Malaysia(RT) - Rs.76000/=
Colombo - Dubai(RT) - Rs.79000/=

மேலும் பலாலி ஊடாகவும்
Chennai செல்ல முடியும்
Condition Applied

No.198, KASTHURIYAR ROAD.
தொடர்புக்கு:-
JAFFNA:- 076 691 1082,83
Land line:- 021 222 9555
Headoffice(Colombo):-
077 108 3480,82,83
011 254 0280
Colombo-13 :- 076 691 1089
011 2333 322

(c-0779)

மின்னஞ்சல்:- SBTRAVELSJAFFNA@GMAIL.COM


### கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்)

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

பரிபாலன சபை பிரமாணம் பந்தி 7இன் பிரகாரம் நிர்வாக சபையின் காலம் காலாவதியாகியதால் பொதுச்சபை அங்கத்தவர்களினால் மேற்படி பொதுக்கூட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்பதை அறியத் தருகிறோம்.

மேற்படி ஆலயத்தின் 2024ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 28.07.2024ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பொதுச் சபை அங்கத்தவர்கள்

(1467)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி நண்பி
**சுஜாதா** அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர் கந்தசாமி சிவஞானம்



அவர்களின் மறைவுச்செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
**1989/90 யாழ். பல்கலைக்கழக கலைப்பீட நண்பர்கள்**


## வேலைவாய்ப்பு

வடக்கின் முன்னணி கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு


1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
2. கணக்கு உதவியாளர் (Account assistant)
3. விற்பனைப் பிரிதிநிதி

உடன் தேவை. பொருத்தமானவர்கள் தங்களுடைய சுயவிபரக் கோவையை Whatsapp/ gmail மூலம் 16.07.2024 இற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

(C-781)

076 072 1245 (Whatsapp)
petformjaffna@gmail.com


## மரண அறிவித்தல்



பிறப்பு 13 - 09 - 1951

இறப்பு 10 - 07 - 2024

### செல்லப்பா யோகேந்திரன்

இல.50/3, 1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.216, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான செல்லப்பா யோகேந்திரன் அவர்கள் 10.07.2024ம் திகதி இறைபதம் அடைந்துவிட்டார்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லப்பா - தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நரசிங்கமூர்த்தி - விமலேஸ்வரி, மனோகரன் மற்றும் நித்தியானந்தன் - அன்னலட்சுமி, கிருஷ்ணமூர்த்தி - வரதலட்சுமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (14.07.2024) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(1468)

தகவல் : குடும்பத்தினர்


## யாழ்ப்பாணத்தில் இசைக்குழுவுக்கான கலைஞர்கள் தேவை

1. கீபோட்
2. ஒக்டபாட்
3. தபேலா
4. மிருதங்கம்
5. எலக்ரோனிக் ட்ரம்
6. பாடகர்கள்
7. பாடகிகள்

(1464)

எஸ். குணா - யாழ் நகர்

077 908 6737

## ஆடு விற்பனைக்கு

உரும்பிராயில் சணல் கடா ஆடு விற்பனைக்கு உண்டு.

(1469)

077 689 4344

## ஆசிரியர் வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு புவியியல், ICT, தமிழ், வரலாறு, குடியுரிமை, கணிதம் ஆகிய பாடங்கள் தரம் 06 - 11 க்கு கற்பிக்கக்கூடியவர்கள் தேவை

(C-0783)

077 087 2903

## வேலைக்கு ஆட்கள் தேவை

நாவலர் வீதியில் அமைந்துள்ள விமானப் பற்றுச்சீட்டு காரியாலயம் ஒன்றிற்கு அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(1466)

074 394 6325
074 394 6326

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு வைரவர் கோவிலுக்கு பக்கத்து வீதியில் 1 பரப்புக் காணி(சதுரம்) மலசலகூடம், குழாய்க் கிணறு (நல்ல தண்ணீர்) உடன் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(1444)

077 574 3271


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவது அவசியம்

## ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா தயார்



(கொழும்பு)

**காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படும் அதேவேளை, நிலைமாறுகால நீதியை முன்னிறுத்திய நியாயபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமென அமெரிக்கத்தூதுவர் ஜூலிசங் காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.**

அமெரிக்கத்தூதரகத்தின் அழைப்பின்பேரில் தூதுவர் ஜூலி சங்கிற்க்கும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் சார்பில் அதன் தவிசாளர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த மற்றும் நிறைவேற்றுப்பணிப்பாளர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் சவால்கள் தொடர்பில் அமெரிக்கத்தூதுவருக்கு விளக்கமளித்த அலுவலக அதிகாரிகள், அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளில் இருதரப்புப் பங்காண்மை மற்றும் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வது குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.


அதேபோன்று மனிதப்புதைகுழி அகழ்வு உள்ளடங்கலாக காணாமல்போனோர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் மனித எச்சங்களை ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய அவசியமிருப்பதனால், இவ்வனைத்து செயன்முறைகளுக்கும் அமெரிக்காவின் நிதி, தரவு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படவேண்டியது அவசியம் எனும் தனது நிலைப்பாட்டை காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகளிடம் எடுத்துரைத்த அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், நிலைமாறுகால நீதியை முன்னிறுத்திய நியாயபூர்வமான நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மேலும் இது குறித்து தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்கத்தூதுவர், "காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விக்கான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இலங்கையர்களுக்கு அதற்கான பதிலையும், ஆறுதலையும் வழங்குவதற்கு முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் அவசியமான ஒத்துழைப்பை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது" எனத் தெரிவித்துள்ளார். (நி-6)

# ரணில்-ராஜபக்ஷக்கள் இரகசிய சந்திப்பு

## அரசியல் மட்டத்தில் பரபரப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ராஜபக்ஷர்களுக்கும் இடையில் கடந்த 10 ஆம் திகதி காலை அவசர இரகசிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சாகல ரத்நாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே பங்கேற்றுள்ளதுடன்,

பொதுஜன பெரமுனக் கட்சியின் சார்பில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் அதிக தகவல்கள் வெளியாகவில்லை.

எனினும் நேற்று முன்தினம் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட வேளையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான காலவரையறையை தீர்மானிப்பது தொடர்பான விவாதமே பிரதானமாக அமைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனக் கட்சியும் இணைந்து ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளரை முன்வைப்பது தொடர்பில் மிகவும் இரகசியமான கலந்துரையாடலை நடத்தியிருக்கலாம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் முக்கிய கட்சிகளின் சார்பில் உயர்மட்ட தலைவர்கள் மட்டுமே கலந்து கொண்டுள்ளமை குறித்து அதிகம் பேசப்படுகிறது.

இதுவொரு இரகசிய சந்திப்பு என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடை பெறுமா இல்லையா என்ற விவாதம் எழுந்துள்ள நிலையில், அரசியல் மட்டத்தில் பரபரப்பு நிலைமையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# போதனாவில் குருதிக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனைத்துவிதமான குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவும் நிலையில் குறிப்பாக "O" பொசிட்டிவ் குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்.போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, தகுதியுடைய குருதிக் கொடை தன்னார்வலர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கிக்கு நேரில் வந்து இரத்த தானம் வழங்கி உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-33)

சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

திருமதி. கிருஸ்ணமணி புஸ்பகுமார்

(SLTS-I பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)



சேவை விபரம்

சேவை முன்பயிற்சி

+ மகோ விஜயபா மத்திய கல்லூரி 06.04.1988-26.04.1988
+ யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை 10.06.1988-16.10.1989
+ யா/ அராலி வள்ளியம்மை ஞானகர்த்த பாடசாலை 17.10.1989-28.01.1990
+ யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 29.01.1990-31.12.1991
+ யா/அராலி வள்ளியம்மை ஞானகர்த்த பாடசாலை 01.01.1992-01.02.1992
+ யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை 02.02.1992-16.01.2014
+ யா/வட்டு இந்துக் கல்லூரி 17.01.2014-13.07.2024

எமது கல்லூரியில் பத்து வருடங்களாக ஆசிரியராக சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.கிருஸ்ணமணி புஸ்பகுமார் அவர்கள் ஓய்வுக் காலத்தில் நோய்நொடி இன்றி நலமாக வாழ வேண்டுமென நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். வாழ்க பல்லாண்டு வாழ்க வளமுடன்

(1431)

வாழ்த்துவோர்:- நலன்புரிக் கழகம், யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுமீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்ட அரையிறுதி ஆட்டம்


நாவாந்துறை சென்மேரிஸ்


நாவாந்துறை சென்நீக்ளஸ்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தமது வைரவிழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இதன் அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்நீக்ளஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதவுள்ளது. (நி-6-90)

# யூரோ கிண்ண கால்பந்து இறுதிப் போட்டி நாளை

## ஸ்பெயின் – இங்கிலாந்து பலப்பரீட்சை

17 ஆவது யூரோ கோப்பை கால்பந்து போட்டி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. ஜேர்மனியில் கடந்த மாதம் 17ஆம் திகதி தொடங்கிய இப் போட்டியில் 24 அணிகள் பங்கேற்றன. அவை 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டன.

லீக், நாக் அவுட் மற்றும் கால் இறுதி போட்டி முடிவில் ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றன.

முதல் அரை இறுதியில் ஸ்பெயின் 2-1 என்ற கோல் கணக்கில் பிரான்சையும் 2ஆவது அரை இறுதியில் இங்கிலாந்து 2-1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தையும் வீழ்த்தின.

ஐரோப்பிய கால்பந்து கோப்பை யாருக்கு என்பதை தீர்மானிக்கும் இறுதிப் போட்டி நாளை நள்ளிரவு 12.30 மணிக்கு நடக்கிறது. இதில் இங்கிலாந்து-ஸ்பெயின் அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன. 3 முறை சம்பியனான ஸ்பெயின் (1964, 2008, 2012) 5ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. அந்த அணி 4ஆவது முறையாக கோப்பையை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

இங்கிலாந்து அணி இதுவரை யூரோ கால்பந்து கோப்பையை வென்றதில்லை. கடந்த 2020ஆம் ஆண்டு இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து முதல் முறையாக முன்னேறியது. இதில் இத்தாலியிடம் தோற்றது.

தற்போது 2ஆவது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது. இந்த முறை கோப்பையை வெல்லும் வேட்கையில் உள்ளது.

இங்கிலாந்து அணியும் பலம் வாய்ந்ததாக உள்ளது. அதனால் இறுதிப்போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-6)




# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3167

### விமல்




### அக்ஷயன்

என் பையன் சொன்னா சந்தோசப்படுற என் மனைவி அதையே நான் சொன்னா மட்டும் எரிஞ்சு விழுறா

அப்படி என்ன சொன்ன சகல?

தாயிற் சிறந்த கோவிலுமில்லைன்னு தான்!

### மதுபாலா




### கரிவர்ஷன்




### சிவருத்திரன்




### கிருஷாந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றீசியன் சங்கமம்-2024 பழைய மாணவர் ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

## அதிபரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாண வலிகாமப்பகுதியில் கடந்த 117 ஆண்டு காலமாக கல்விப்பணியிலும் விளையாட்டுத்துறையிலும் தனி முத்திரை பதித்து விளங்குகின்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆண்டுநிறைவில் பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்விற்கும் மற்றும் சாதனையாளர் கௌரவிப்புக்கும் கல்லூரி முதல்வர் என்ற வகையில் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியானது நூற்றாண்டு காலப்பகுதிக்கு மேலாக கல்வி அறிவிலும் விளையாட்டு நுட்பங்களிலும் மென்திறன் வெளிப்பாட்டிலும் ஆளுமையும் முதிர்ச்சியும் சிறந்த சாதனையாளர்களை உருவாக்கி வடமாகாணத்திற்கும் தேசியத்திற்கும் பல சாதனையாளர்களை வழங்கி வருகின்றது. கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் ஆசிரியர்களாக, அதிபர்களாக, நிர்வாக சேவை அதிகாரிகளாக மற்றும் அரச தனியார் துறையின் தொண்டு பணியாளர்களாக நம் தாய்த்திருநாட்டிலும் புலம் பெயர் நாடுகளிலும் தொடர்ந்து சாதனையாளர்களாகத் திகழ்வது நம் கல்லூரித்தாய்க்குப் பெருமை சேர்க்கின்றது. எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் ஆர்வத்துடனும் ஆவலுடன் கல்லூரித்தாயின் மூலம் தாம் பெற்றுக் கொண்ட வெற்றிகளுக்கும் விருதுகளுக்கும் தமது நன்றியைத் தெரிவிக்கும் முகமான இவ் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வுகளை ஒழுங்கு செய்து ஒன்று கூடுவது எம்மை பெருமகிழ்வடைய வைக்கின்றது. "கடின உழைப்பு எதையும் வெல்லும்" என்னும் கல்லூரியின் மகுட வாசகத்திற்கமைய தொடர்ந்தும் கல்லூரியின் காலத்திற்குப் பின்னும் தமது வாழ்க்கையில் கல்லூரியின் மகுட வாசகத்தை தாங்கிச் செல்லும் கல்லூரித்தாயின்பால் பழைய மாணவர்கள் கொண்டிருக்கின்ற பற்றையும் பாசத்தையும் வெளிக்கொணர்வதாக இது அமைக்கின்றது. தமது கடின உழைப்பால் சிறந்த கல்வி அறிவிலும் விளையாட்டு நுட்பங்களிலும் மென்திறன் வெளிப்பாட்டிலும் ஆளுமையும் முதிர்ச்சியும் மென்மேலும் சிறந்து விளங்க அனைவரையும் வாழ்த்தி ஆசிகள் கூறுகின்றேன்.

**அருட்தந்தை ஆ.மைக் மயூரன்,**
**அதிபர், யா/புனித ஹென்றி அரசர் கல்லூரி,இளவாலை.**



**இடம்: கல்லூரி மைதானம்**
**காலம்: 2024.07.13(சனிக்கிழமை)**
**மாலை 3 மணி**
**பிரதம விருந்தினர் :**
Mr. A. Jossey Jeyandran
Administrative Director,
President OBA, France.
**சிறப்பு விருந்தினர்கள் :**
**A.R. விஜயகுமார் "கலாவித்தகர்"**
**செ.பீற்றர் பியன்வெனு** (சமாதான நீதவான்)

**குருத்துவப் பணியில்**
**ஐம்பதாவது ஆண்டு...**

**அருட்பெருங் குருவே!**
**அறநெறி வாழ்வில்**
**ஐம்பது ஆண்டுகள்**
**ஆண்டவன் அருளிய**
**அற்புதத் தருணங்கள்**
**குருவாய் ஆசானாய்**
**ஆயனாய் அரும் பணிகள்**
**ஆற்றி ஆற்றுப்படுத்தியே**
**அருள் வாழ்வில் அவனியை**
**நிலை நிறுத்தும் பேராளனே**
**வாழி நீ வாழியே**



Rt.Revd.Dr.Justin B
Gnanapragasam
(Bishop of Jaffna)

## சாதனைகள் பல படைத்திட

யா/புனித ஹென்றியரசர் கல்லூரியின் 117 ஆவது அகவையின் நிறைவிலே இளவாலை பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

எமது கல்லூரி கல்விப்புலத்திலும் இணைப்பாடவிதானத் துறையிலும் சாதனைகள் பல புரிந்து தனக்கெனத் தனியான ஒரு இடத்தைத் தக்க வைத்துள்ளது. இப் பெருமைக்கு பின்னே "கடின உழைப்பு எதையும் வெல்லும்" என்ற மகுடவாசகத்திற்கு உயிர் கொடுக்கும் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் தாராள மனத்துடன் கல்லூரிக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் நவில்வதில் மனநிறைவடைகின்றேன்.


எமது கல்லூரி இன்னும் பல்லாண்டுகள் சாதனைகள் படைக்கவும் சமுதாயத்தின் நற்பிரஜைகளை உருவாக்கவும் இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

G.A.டயஸ், **தலைவர்**, O.B.A,
**இளவாலை.**

## National Competition Achievements-2023



UNDER 20 FOOTBALL 2ND RUNNER UP



UNDER 20 WEIGHT LIFTING 1ST PLACE



UNDER 16 FOOTBALL CHAMPIONS



PHYSICAL TRAINING 2ND RUNNER UP

## A/L 2022 - பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர்

(சி-776)



Raveenthiramoorthy Jogeesan,
Faculty of Information Technology,
University of Moratuwa.



Kunarasa Peralan
Faculty of Engineering,University of Sri Jayewardenepura



Pavalendran Dishanthan
Faculty of Engineering
University of Sri Jayewardenepura



Jeyathasan Jefron Thomas
Faculty of Management and Finance , University of Colombo



Thevaranjitham Nitharshan
Faculty of Arts,
University of Peratheniya.



Kayasinth Ravinthirakumar
Kanes Rakeshan
Faculty of Engineering
University of Moratuwa



Alexander Regno Janshan
Faculty of Arts
University of Jaffna,



Alexander Boswin
Faculty of Engineering,
University of Moratuwa

**OLYMPIA SPORTS**
Dealers all kinds of sports goods
Band Items, Musical instruments&Jersey
021 222 3490 / 077 806 0267
077 675 1646 / 077 533 5004
olympiasportsjaffna@gmail.com
NO.273, K.K.S Road, Jaffna.

**NORTHERN SPORTS COLLEGE**
**MARUTHANARMADAM**
சிறுவர்களுக்கான பயிற்சிகள்
Table Tennis, Badminton Chess, Tennis Football
4 வயதிலிருந்து
கைதடி வீதி, மருதனார்மடம்.
077 806 0267 - 021 [illegible] 9631.

**Tastraa(pvt) Ltd.**
No.41 Kalasalai Road,
Thirunelveli,Kopay.
T.P: 021 205 2200
077 978 9223
E.mail: tastramani@gmail.com
S.T.Manivannan -Managing Director

**மறோன்**
**தச்சு தொழிலகம்**
நல்லாயன் வீதி,
இளவாலை.
தொடர்புகளுக்கு:
077 901 9972

**J.S.R SOLAR POWER (PVT)LTD**
Stanley Road, Jaffna.
077 608 0988
jsrsolar@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி தேவாரமடம் திறப்புவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சிவபூமி தேவார மடம் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வில் வரவேற்புரை சிவபூமி அறக் கட்டளை இணைச் செயலாளர் ம.தயாகரன், ஆசியுரை சித் தங்கேணி சிவ ஸ்ரீ ஜயா வாசு தேவக் குருக்கள், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரஞான சம்பந்த பரமாச் சார்ய சுவாமிகள் மற்றும் தர்மபுரம் திருக்கேதீஸ்வர மட ஆதீன ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகளும் வழங்க வுள்ளனர்.

தலைமை உரை சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், பிரதம விருந்தினர் உரை தமிழ்நாடு சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீ.சிவஞானம், சிறப்பு விருந்தினர் உரை யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரி ராம் மகேஸ், சங்கானை வலி மேற்கு பிரதேச செயளாளர் திருமதி கவிதா உதயகுமார் மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் ய. அனிருத்தன், சிறப்புரையை சட்டத் தரணி உமாகரன் இரா சையா ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர்.

கலை நிகழ்வுகளாக பொன் னாலை சந்திரபரத கலாலய மாணவிகள் வழங் கும் திரு மறை நடன ஆற்றுகையும் இறுதி நிகழ்வாக நன்றி உரையினை சிவபூமி அறக் கட்டளை இணைச் செயலாளர் பு.ஸ்ரீ விக்கினேஸ்வரன் ஆற் றவுள்ளார். (நி-6)

# விபத்துகளால் அனுமதிக்கப்படுவோர்
# யாழ்.போதனாவில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

**வீதி விபத்துக்களினால் அவசரச் சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக யாழ். போதனா வைத்திய சாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை வைத்திய நிபுணர் கந்தையா மணிதீபன் தெரிவித்துள்ளார்.**

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது யாழில் இடம் பெறும் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக 16 தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவர்களே இவ்வாறு வீதி விபத்துக் களினால் பெரிதும் பாதிக் கப்படுகின்றனர் என தெரிவித்தார். (நி-6)

# யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு கூட்டம்
## பிரதமர் தினேஸ் குணவர்த்தன பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டமானது பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையிலும் கடற்றொழில் அமைச்சரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநரும் ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரின் பிரசன்னத்துடன் நேற்று காலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்டத்தினுடைய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் முன்னேற்ற நிலைமைகள் குறித்து பிரதமர் தினேஸ் குணவர்த்தனவால் பரிசீலிக்கப்பட்டது.

இவ் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் யாழ்.மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள்,மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அடை காக்கும் கருவி மற்றும் தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு அரிசி என்பன பிரதமரினால் வழங்கி வைக்கப்பட்டது. (நி-6-33)

# துன்னாலையில்
# 17சந்தேக நபர்கள் கைது

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட துன்னாலை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை அரச புலனாய்வாளர்களின் தகவலுக்கு அமைய இராணுவம் மற்றும் மோப்ப நாய்களின் உதவியுடனும் பொலிஸாரால் பாரிய சுற்றி வளைப்பு மேற்கொள்ளப் பட்டது.

இச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நீதிமன்றால் உத்தரவிடப்பட்ட திறந்த பிடியாணைகளுக்கு அமைவாக சட்டவிரோத மதுபானமான கசிப்பு விற்பனையாளர்கள், மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 17 சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-60)



# மந்துவில் பகுதியில் வெடி பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் வடக்கு குடியிருப்புப் பகுதியில் காணி ஒன்றில் இருந்து ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் தனது காணியை துப்பரவு செய்த போது நிலத்தின் கீழ் புதைக் கப்பட்ட ரம் ஒன்றினுள் வெடி பொருட்களை ஒத்த பொருட்கள் தென்பட்டமையை அடுத்து அவர் உடனடியாக பொலிஸாருக்கு குறித்த விடயத்தை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கொடிகாமம் பொலிஸாரோடு இணைந்து விசேட அதிரடிப் படையினரும் அவ் இடத்திற்கு விரைந்து ரம்மை எடுத்த போது அதற்குள் வெடி பொருட்கள் காணப் பட்டன. இவற்றில் 8 மகசின்கள், 2 கைக் குண்டுகள், 3 மிதி வெடிகள் மற்றும் சுமார் 1000 ரவைகளும் மீட்கப் பட்டன. (நி-6)

# திறந்து வைக்கப்படவுள்ள
# என்பு மச்சை மாற்று சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

இரத்த புற்றுநோய் மற்றும் அதனோடு இணைந்த நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு வழங்கக் கூடிய என்புமச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறான சிகிச்சை நிலையம் மகரகம வைத்தியசாலை மற்றும் கொழும்பு சிறுவர் வைத்தியசாலை ஆகிய இரண்டில் மாத்திரம் காணப்படுகின்றது. இது இலங்கையின் மூன்றாவது நிலையமாக பதிவு பெறுகின்றது.

இந்த சிகிச்சை மிகவும் சிக்கலான ஒரு விடயங்களை கொண்டுள்ளது. இரண்டு விஷேட படுக்கை அறைகளை கொண்டுள்ளது.

ஆகவே மாதம் ஒன்றில் இருவருக்கு மாத்திரம் சிகிச்சை செய்யமுடியும்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வைத்திய நிபுணர்களின் கடுமையான முயற்சியில் பல சிரமங்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் சுகாதார அமைச்சர் Dr. ரமேஸ் பத்திரனவால் வைபவ ரீதியாக எதிர்வரும் வாரம் திறந்து வைக்கப்படவுள்ளது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முட்டைக்கு வற் வரி அதிகரிக்கும் திட்டமில்லை

(கொழும்பு)

முட்டைகளுக்கு அடுத்த ஆண்டு வற் வரியை அதிகரிக்கும் திட்டம் இல்லை என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

முட்டை உற்பத்தியாளர்களின் சங்கம் என கூறிக் கொள்ளும் குறிப்பிட்ட சங்கம் முட்டைக்கு அடுத்த வருடம் முதல் வற்வரி விதிக்கப்படவுள்ளதாகவும் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், முட்டைகளுக்கு அடுத்த ஆண்டு முதல் அல்ல ஏற்கனவே 18 சதவீத வற் வரி விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு 7 மில்லியன் முட்டைகளின் தினசரி நுகர்வு இருந்த போதிலும், இந்த ஆண்டு தினசரி முட்டை நுகர்வு 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதன்படி, தற்போது இலங்கையில் நாளாந்த முட்டை தேவை 8.5 மில்லியன் முட்டைகளாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
(446)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
00919566156719
WU MoneyGram Ria
077 839 3974

# ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்தக்கோரி மீண்டும் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்படாததால் ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரியும் 19 ஆவது திருத்தத்தை முறையாக நிறைவேற்றுவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்துமாறும் கோரியும் சட்டத்தரணி அருண லக்சிறி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இதில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற பொதுச்செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக, ஒரு வருடத்திற்கு பின்னர் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை பறிக்கும் வகையில் அரசியலமைப்பின் 70 ஆவது சரத்து திருத்தப்பட்டுள்ளதாக மனுதாரர் கோரியுள்ளார்.

இந்தத் திருத்தத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும் ஜனாதிபதி கையொப்பமிடாததாலும் இந்த திருத்தத்தை சட்டமாக கருதமுடியாது என்றும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் சட்டமாக ஏற்றுக் கொள்வது தவறானது என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அண்மையில் சமிந்திர தயான் லெனவ என்பவரால் ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரிய மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகளினால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஐ.நா பிரதிநிதி இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரி அசுலே இலங்கைக்கு உத்தியோக பூர்வ பயண மொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்புக்கிணங்க இந்த பயணம் மேற்கொள்ளப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒட்ரி அசுலே எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒட்ரி அசுலேவின் இந்த மூன்று நாள் பயணத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

இதனை தொடர்ந்து, இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோவுக்கிடையிலான 75 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெறவுள்ள நிகழ்விலும் அவர் பங்கேற்கவுள்ளார். மேலும், இலங்கையில் உள்ள உலக பாரம்பரிய தளங்களையும் ஒட்ரி அசுலே பார்வையிட உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)





## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.06.2024 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் கந்தசாமி சிவஞானசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.07.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலைப் புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 16.07.2024 செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பம் சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.

சோதி வைரவர் கோவிலடி, இடைக்காடு, அச்சுவேலி.

(1461)

தகவல் குடும்பத்தினர்.


# இராசிபலன்

13.07.2024
ஆனி 29 , சனிக்கிழமை
சப்தமி பிற்பகல் 1.56 மணிவரை.

அத்தம் முன்னிரவு 6.43மணிவரை
சுபநேரம் -2.59-4.29 மணிவரை
இராகுகாலம் -8.59-10.29 மணிவரை

சந்திராஷ்டமம்.
திருவோணம்,அவிட்டம்.

**வளவன்**

**மேஷம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், உற்சாகமான நாள்.

**கடகம்** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், நிதிநிலை உயர வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், ஒரு சில வேலைகளில் சிறிது அலைய நேரிடலாம், சயனசுகக் குறைகள் ஏற்படலாம்.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவார்கள், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**ரிஷபம்** பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்தினர்களின் வருகையுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் தேவை, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவார்கள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

முயற்சி செய்வது தோல்வியிலும் முத்திரை பதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## நேபாளத்தில் நிலச்சரிவு!

# 60 பயணிகளுடன் மாயமான பேருந்துகள்



(காத்மண்டு)

மத்திய நேபாளத்தில் மதன்-ஆஷ்ரித் நெடுஞ்சாலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் ஏற்பட்ட நிலச்சரிவில் இரண்டு பயணிகள் பேருந்துகள் அடித்துச் செல்லப்பட்டன. இந்த பேருந்துகளில் 63 பயணிகள் இருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நேபாளத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, திரிசூலி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக, மதன் - ஆஷ்ரித் நெடுஞ்சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டு, நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில், சாலையில் சென்று கொண்டிருந்த இரண்டு பேருந்துகள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டன.

இரண்டு பேருந்துகளிலும் 63 பயணிகள் இருந்துள்ளனர். பேருந்தில் இருந்த பயணிகளை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. பேருந்து திரிசூலி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதால், தேடுதல் மற்றும் மீட்புப் பணிக்கு இடையூறாக உள்ளது எனக் கூறப்படுகிறது. (நி-6)

# சந்திரனின் வேகத்தை துல்லியமாக கணிக்க முடிவு

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, நிலவின் தென் துருவத்தில் மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளது. அங்கு மனிதர்கள் தரையிறங்கக்கூடிய இடங்களை கண்டறிந்துள்ளது.

சந்திரனின் தென் துருவம் என்பது சூரியனில் இருந்து விலகி நிரந்தரமாக நிழலாக இருக்கும் ஒரு பகுதி. இங்கு மனிதர்கள் கால் பதிக்க வசதியான பகுதிகள்கண்டறியப்பட்டுள்ளன.

கடந்த 1969 ஆம் ஆண்டு நாசா தனது அப்போலோ திட்டம் மூலம் நிலவுக்கு முதல் முறையாக மனிதர்களை அனுப்பி வரலாறு படைத்தது. அதன்பின், தற்போது மீண்டும் நிலவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள நாசா முடிவு செய்து அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தத் திட்டத்திற்கு ஆர்டெமிஸ் என பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி நாசா நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பி பல்வேறு ஆய்வுகளை நடத்த உள்ளது.

இந்நிலையில், நாசா விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி அறிக்கை ஒன்றில், நிலவின் நேரம் பூமியை விட வேகமாக ஓடத் தொடங்கியுள்ளது. நிலவின் நேரம் ஒரு நாளைக்கு 57 மைக்ரோ விநாடிகள் வேகமாக ஓட தொடங்கியுள்ளது என தெரிவித்துள்ளது.

ஆர்டெமிஸ் பயணத்திற்கு முன் சந்திரனின் நேரத்தை துல்லியமாகக் கணிக்க நாசா முடிவெடுத்துள்ளது.

52 ஆண்டுகளுக்கு முன் விண்வெளி வீரர்கள் கடைசியாக சந்திரனில் கால் பதித்தனர். அப்போதிருந்த நேரத்துடன் ஒப்பிடும்போது நிலவின் நேரம் சுமார் 1.1 வினாடிகள்நீடிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக பார்க்கும் போது இது ஒன்றும் பெரிய விடயம் கிடையாது. பூமி மற்றும் சந்திரனின் நேரம் சரியாக இருந்தால் தான் நேவிகேஷன் அமைப்புகள் போன்ற செயற்கைக் கோள்கள் துல்லியமாக செயற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உக்ரைன் மீதா
# உடனடியாக நிறு

## ஐ.நா தீர்மானம்

- 99 நாடுகள் ஆதரவாக வாக்களிப்பு
- 9 நாடுகள் எதிராக வாக்களிப்பு
- இந்தியா உள்ளிட்ட 99 நாடுகள் வாபஸ்

(ஜெனீவா)

**உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்பிற்கு எதிரான தாக்குதல்களை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் இந்த வரைவுத் தீர்மானத்தை ஆதரித்தன.**

உக்ரைனுக்கு எதிரான தனது ஆக்கிரமிப்பை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் மற்றும் 'ஜபோரிஜியா அணுமின் நிலையத்திலிருந்து தனது இராணுவம் மற்றும் பிற அங்கீகரிக்கப்படாத பணியாளர்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று கோரும் வரைவுத் தீர்மானத்தை, உக்ரைன் கொண்டு வந்தது.

ஜபோரிஜியா அணுமின் நிலையம் உட்பட உக்ரைனின் அணுசக்தி நிலையங்களின் பாதுகாப்பு என்ற தலைப்பிலான இத்தீர்மானத்தில், "உக்ரைனுக்கு எதிரான ஆக்கிரமிப்பை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் உள்ள உக்ரைன் பிரதேசத்தில் இருந்து தனது

# கொவிட் வைரஸ் தீவிரம்
## ஒரு வாரத்தில் 1,700 பேர் உயிரிழப்பு
### உலக சுகாதார அமைப்பு அதிர்ச்சித் தகவல்


(ஜெனீவா)

கொவிட் வைரஸின் தீவிரம் குறைந்துள்ள போதிலும், அது இன்னும் உலகிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப் ரேயஸ் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடை பெற்ற செய்தியாளர் சந்திப் பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் உலகம் முழுவதும் ஒரு வாரத்தில் 1,700 பேர் கொவிட் தொற்றால் இறப்பதாக அவர் தெரிவித்தார்.

பல நாடுக ளில் கொவிட் வைரஸிற்கு எதி ராக நோய்த் தடுப்பு மருந்து களைப் பெறுவதில் குறைந்த போக்கு காணப்



படுவதாகக் குறிப் பிட்ட அவர், வைரஸைத் தொடர்ந்து பலவீனப்படுத்தத் தடுப்பூசி களைப் பெறுவது அவசியம் என்றும் வலியுறுத்தினார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ான தாக்குதலை ...றுத்த வேண்டும்!



அனைத்து இராணுவப் படைகளையும் நிபந்தனையின்றி திரும்பப் பெற வேண்டும். ஐபோரிஜியா அணுமின் நிலையத்திலிருந்து ரஷ்யா தனது இராணுவம் மற்றும் பிற அங்கீகரிக்கப்படாத பணியாளர்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்பன அடங்குகின்றன.

உக்ரைனின் அனைத்து அணுசக்தி நிலையங்களிலும் அணு விபத்து அல்லது விபத்து ஏற்படும் அபாயத்தை ரஷ்யா அதிகரிக்கிறது. எனவே, அணுமின் நிலையத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உக்ரைனின் இறையாண்மையின் கீழ், அந்நாட்டு அதிகாரிகளின் முழு கட்டுப்பாட்டிற்கு உடனடியாக ஆலையை திரும்ப ஒப்படைக்க வேண்டும். உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்பிற்கு எதிரான தாக்குதல்களை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் இந்த வரைவுத் தீர்மானத்தை ஆதரித்தன.

இதையடுத்து, ஐ.நா பொதுச்சபை, நேற்று முன்தினம் இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. இந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில், அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட 99 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. ரஷ்யா, பெலாரஸ், கியூபா, வடகொரியா, சிரியா உள்ளிட்ட 9 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. இந்தியா, சீனா, வங்கதேசம், பூட்டான், எகிப்து, நேபாளம், பாகிஸ்தான், சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா உட்பட 99 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்தன. (நி-6)

## துருக்கி ஜனாதிபதி- கிரீஸ் பிரதமர் சந்திப்பு



(வோஷிங்டன்)

துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் கடந்த புதன் கிழமை கிரேக்க பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸை அமெரிக்காவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அமெரிக்காவில் நேட்டோ உச்சிமாநாட்டின் ஓரத்தில் மூடிய கதவு சந்திப்பின் போது, எர்டோகன் மற்றும் மிட் சோடாகிஸ் இருதரப்பு உறவுகள், பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர். .

நல்ல அண்டை நாடு என்ற கொள்கையின் அடிப்படையில் கிரீஸ்"டன் "ஒற்றுமை உணர்வை" வளர்ப்பதற்கான தனது முயற்சிகளை துருக்கியே தொடர்கிறது என்று ஜனாதிபதி அடிக்கோடிட்டுக் காட்டினார். (நி-6)

## ரஷ்யாவின் தீவிர உதவியாளராக சீனா
## நேட்டோ குற்றச்சாட்டு




(வோஷிங்டன்)


உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவின் தீவிர உதவியாளராக சீனா செயற்பட்டு வருவதாக நேட்டோ அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் ஆரம்பமான நேட்டோவின் 75 ஆவது ஆண்டு உச்சி மாநாட்டிலேயே குறித்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதன்போது "ரஷ்யாவின் இராணுவத் திறனைப் புதுப்பிக்க சீன அரசு ஆயுதங்கள், ஆயுத பாகங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் என்பனவற்றை வழங்கி வருவதை நிறுத்த வேண்டும்" என நேட்டோ தலைவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன் ரஷ்யாவுக்கு சீன அரசு செய்து வரும் உதவிகள் எதிர்காலத்தில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர். (நி-6)

## பாகிஸ்தான் வாராந்த சந்தையில்
## பாரிய தீ விபத்து
## 500 கடைகள் தீக்கிரை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாத்திலுள்ள வாராந்த சந்தையொன்றில் கடந்த புதன்கிழமை பரவிய தீயினால் சுமார் 500 கடைகள் தீக்கிரையாகியுள்ளன.

"இத்வார் பஸார்" என அழைக்கப்படும் இந்த வாராந்த சந்தையில் இச்சம்பவம் இடம் பெற்றுளளது.

சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் பரந்துள்ள இந்த வாராந்த சந்தையில் 2,700 இற்கும் அதிகமான கடைகள் நடத்தப்பட்டு வந்தன.

இச் சந்தையின் ஆடைகள் மற்றும் பாதணிகள் பிரிவில் தீ ஏற்பட்டதாகவும், விரைவில் ஏனைய பகுதிகளுக்கும் இத் தீ பரவியதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

## தரையிறங்கும்போது தீ பிடித்த விமானம்
## உயிர் தப்பிய பயணிகள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சவுதி எயார்லைன்ஸ் இற்குற்குச் சொந்தமான விமானமொன்று தரையிறக்கும் போது தீ பிடித்துள்ளது.

பாகிஸ்தானின் பெஷாவர் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் தரை யிறங்கும் போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

297 பயணிகளுடன் ரியாத்தில் இருந்து பெஷாவர் வந்தடைந்த இந்த விமானம், தரையிறங்கும் கருவியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீ பிடித்துள்ளது.

உடனடியாக விமானம் ஓடுபாதையில் நிறுத்தப்பட்டு, விமானத்திலிருந்த 276 பயணிகளும், 21 பணியாளர்களும் அவசர கதவு வழியாகக் கீழே இறக்கி விடப்பட்டனர். இதேவேளை தீயணைப்பு படையினர் விமானத்தில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 வயதைக் கடந்த 450 பேர் இலங்கையில்

## நிதி இராஜங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் 100 வயதை கடந்த 450 பேர் வசிப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

அத்துடன், அவர்கள் வயது முதிர்ந்தவர்களுக்கான விசேட அரச கொடுப்பனவுக்குத் தகுதி பெற்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

மேலும் நாட்டில் 2.7 மில்லியன் பேர் 60 வயதைக் கடந்தவர்களாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மக்கள் தொகைப் பிரச்சினை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 11 ஆம் திகதி உலக மக்கள் தொகை தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (நி-6)

# பாதாள உலக கும்பலிடமிருந்து பொலிஸாருக்கு கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

பாதாள உலக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்குப் பாதாள உலக கும்பலிடமிருந்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இதனை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவிக்கையில், பாதாள உலக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் சிலரின் பெயர்கள் பட்டியல்படுத்தப்பட்டு அவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், பாதாள உலக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படாது.

விசேடமாக நாடளாவிய ரீதியில் உள்ள சட்டவிரோதத் துப்பாக்கிகள் அனைத்தும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 300 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 270 | 300 | 250 | 300 | 350 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 350 | 300 | 400 |
| தக்காளி | 350 | 300 | 300 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 150 | 100-130 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 250 | 350 |
| கரட் | 400 | 500 | 480 | 350 | 500 |
| பூசணி | 170 | 200 | 200 | 150 | 200 |
| புடோல் | 170 | 250 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 450 | 400 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 220 | 200 |
| பாகற்காய் | 800 | 800 | 1000 | 800 | 800 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 260 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 180 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 300 | 300 | 400-500 | 450 |
| லீக்ஸ் | 550 | 400 | 500 | 350 | 500 |
| பீற்றூட் | 400 | 450 | 550 | 450 | 400 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 400 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 1000 | 600-800 | 1000 |
| போஞ்சி | 800 | 700 | 600 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 800 | 800 | 1000 | 600-650 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 70 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 450 | -- | 500 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 300 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 120 | 60 | 100 | 120 | 60 |

# இன்று ஒரு தகவல் 181



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## இரவு ஏன் இருட்டாக இருக்கிறது?

இருநூறு வருடத்திற்கு முன்னர் ஒருவருக்கு ஒரு சந்தேகம் வந்தது. என்ன சந்தேகம் என்று கேட்கின்றீர்களா? வேறு ஒன்றுமில்லை. இரவு ஏன் இருட்டாக இருக்கின்றது. இது தான் அவருக்கு வந்த சந்தேகம். அவர் பெயர் ஜெ.பி.எல். டிசேசாக்ஸ். சுவிசர்லாந்தில் வாழ்ந்தவர். அவர் தான் இந்த கேள்வியை முதலிலே எழுப்பி வைத்தார். இரவு ஏன் இருட்டாக இருக்கின்றது என்று. அவர் இந்த கேள்வியை நம்மைப் பார்த்து கேட்டிருந்தால் உடனே பதில் சொல்லியிருக்கலாம். இரவில் சூரியன் இல்லை அதனால் இருட்டாக இருக்கிறது என்று. ஆனால் விஞ்ஞானிகள் விவரம் தெரிந்தவர்கள். இந்த பதிலை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஏன் தெரியுமா? இப்போது நீங்களே யோசித்துப்பாருங்கள் விண்மீன் எல்லாம் தானாக ஒளிரக்கூடியது. சூரியனும் ஒரு விண்மீன் தான். அதற்கும் அந்த ஒளிரும் சக்தி இருக்கிறது. அதனாலே தான் அது நமக்கு தேவையான ஒளியையும் வெப்பத்தையும் பகலிலே கொடுக்கிறது.

ஆனால் இரவிலே ஏகப்பட்ட நட்சத்திரங்கள் வானத்திலே இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒரு சூரியன் மாதிரி. அப்படி இருக்கின்ற போது பகலிலே இருப்பதை விட அதிகமாக வெளிச்சம் பூமியிலே இருக்க வேண்டும். ஏன் இல்லை? இப்படி ஒரு கேள்வியை அடுத்த படியாக நம்மை பார்த்து கேட்டு விட்டால் என்ன செய்வது. நீ கேள்வி கேட்பதற்கு நான் தானா கிடைத்தேன். வேறு விவரமான ஆளாக பார் என்று சொல்லி விட்டு நழுவ வேண்டியது தான்.

நட்சத்திரம் எல்லாம் பூமியிலே இருந்து வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கிறது. அதுமட்டுமில்லை. அதில் இருந்து வருகின்ற ஒளியாற்றல் மாறுபடுகிறதாம். எப்படி மாறுபடும்? பூமிக்கும் நட்சத்திரத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவோ அந்த தூரத்தின் வர்க்கத்தோடு தலைகீழ் விகிதத்தால் மாறுபடும். அதனாலே இடைப்பட்ட தூரம் அதிகரிக்க அதிகரிக்க நட்சத்திரத்தில் இருந்து பூமிக்கும் வந்து சேருகின்ற ஒளியின் அளவு மிகவும் குறைந்து போய்விடும். இது ஒரு விளக்கம். அதுவும் உண்மை தான். இருந்தாலும் இதிலே இன்னொரு விடயத்தையும் யோசித்துப் பாரக்க வேண்டும்.

இப்போது உதாரணத்திற்கு சூரியனிடமிருந்து வந்து சேர்கின்ற வெளிச்சத்தில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு வெளிச்சம் தான் ஒரு நட்சத்திரத்திலே இருந்து இங்கே வந்து சேர்வதாக வைத்துக் கொள்வோம். அப்படி என்றால் பத்து லட்சம் நட்சத்திரத்திடமிருந்து பூமிக்கு வந்து சேருகின்ற மொத்த வெளிச்சத்தையும் கூட்டினால் ஒரு சூரியனிடமிருந்து வருகின்ற வெளிச்சத்தின் அளவு இருக்க வேண்டும். இந்த கணக்குப்படி பார்த்தால் இரவு வந்து பகலை விட வெளிச்சமாக இருக்க வேண்டும். இப்போது மறுபடியும் அந்த கேள்வியை யோசித்துப் பாருங்கள்.

இரவு ஏன் இருட்டாக இருக்கிறது? சரி இப்போது இந்த கேள்வி ஒரு பக்கம் இருக்கட்டும். ஒரு சின்ன செயன்முறை செய்து பார்க்கலாம். இரவில் ஒரு இருட்டான பகுதியிலே நில்லுங்கள். வெளிச்சமான பகுதியில் உள்ள ஒரு சுவரை ஒரு சின்ன குழாய் மூலமாக பாருங்கள். ஒரு காகிதத்தை குழாய் மாதிரி சுருட்டிக் கொள்ளலாம். 5 அங்குலம் அல்லது 6 அங்குல நீளம் இருக்கலாம் அது. முதலில் கொஞ்சம் அருகில் இருந்து பார்த்து விட்டு அதன் பின் ஒரு பத்து அடி தூரம் பின்னாடி நகர்ந்து போய் நின்று மறுபடியும் பாருங்கள். முதலில் பார்த்த போது சுவரில் ஒரு சிறிய பகுதி ஒளிவட்டமாக கெரியும் பின்னால் போய் நின்று பார்த்த போது அதிகமான சுவர் பரப்பு தெரியும். ஆனால் வெளிச்சம் குறைவாக இருக்கும். உண்மையிலே இந்த ஒளிக்குறைவு சுவர்பரப்பு அதிகரிப்பதை சரிக்கிட்டுகிறது.

வானத்தில் நட்சத்திரம் பல்வேறு தூரங்களிலே சிதறிக்கிடக்கிறது. நட்சத்திரம் வாயு, தூசுக்கள் சேர்ந்த உடுமண்டலங்கள். ஒரே சீரான வானத்திலே பரவியிருக்கிறது. ஒளி மண்டலங்கள் ஒரே நிலையில் இருப்பதில்லை. எங்களிடமிருந்து விலகி போய் கொண்டே இருக்கும். உடு மண்லங்களின் பின் தங்குதல் என்று இதற்கு பெயர். எட்வின் ஹப்பில் என்கிற வானியல் வல்லுநர் தான் இதைக் கண்டு பிடித்து உலகத்திற்கு எடுத்து சொன்னார். உடு மண்டலத்தில் இருந்து வெளி வருகின்ற ஒளியின் அலைநீளம் அதிகரித்து அது எல்லம் சிவப்பு நிறத்தை அடைந்து விடும். மேலும் அது எல்லாம் பின் நோக்கி விலகுவதனாலே அதிலிருந்து எங்களிடம் வந்து சேருகின்ற ஒளியாற்றல் மிகவும் குறைந்து போய்விடும்.

ஒரு விண்மீனிலேயிருந்து வெளிவருகின்ற ஒளிக்கோள் வளைவிலே அதற்கு முன்னாலே உள்ள வீண்மீன்களினாலே தடுக்கப்பட்டு ஒரளவுற்கு உறிஞ்சப்படுகின்றது. உண்மையில் இந்த உடு மண்டலங்களின் பின் தங்குதல் விளைவுகளால் தொலை தூரத்தில் உள்ள நட்சத்திரத்தின் ஒளி பூமிக்கு கொஞ்சம் கூட வந்து சேருவதில்லை. ஆகாய கங்கை என்று சொல்கின்றோமே அந்த உடு மண்டலத்தின் மையப்பகுதி மிகவும் வெளிச்சமாக உள்ளது. ஆனால் அதை சுற்றியிருக்கின்ற தூசுப்படலம் அதை மறைத்து விடுகின்றது. சிதறடித்து விடுகின்றது. அதனால் அந்த வெளிசசம் மிகவும் குறைந்து விடுகின்றது. இரவு இருட்டாக இருப்பதற்கு இது எல்லாம் தான் காரணம். இந்தக் காரணம் எல்லாம் தெரியாத ஆள் ஒருவர் இருட்டில் எதையோ தேடிக்கொண்டிருந்தார். அவரிடம் போய் என்ன தேடுகின்றீர்கள் இந்த இருட்டில் ரொம்ப நேரமாக என்று கேட்டேன். வெளிச்சத்தை தேடிக் கொண்டிருக்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா பாவற்குளத்தில் 560 ஏக்கரில் நெற்செய்கை

(வவுனியா)

வவுனியா பாவற்குளம் பிரிவில் 3ஆவது போகமாக மாற்று நெற்பயிற்செய்கை தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலாளர் தலைமையில் நீர்ப்பாசன திணைக்கள திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது 3ஆவது போகமாக 560 ஏக்கர்களில் மாற்று நெற்பயிற்செய்கை மேற்கொள்ள தீர்மானம் எட்டப்பட்டதுடன் இதற்குரிய உழுந்து விதைகளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

குறித்த கூட்டமானது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முனனெடுக்கப்பட்டதுடன் இதில் நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பலரும் பங்குபற்றியிருந்தனர். (நி-6)

# அறிவுறுத்தலை மீறி மேலதிக விதைப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு பழைய முறிகண்டி கிராமத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற் செய்கையில் மேலதிக விதைப்பு இடம்பெற்றுள்ளது என தெரியவந்துள்ளது.

சிறுபோக நெற்செய்கை கூட் டத்திலேயே அதிகாரிகளினால் மேலதிக விதைப்பு இடம்பெற்றால் தண்டம் அறவிடப்படும் என்ற அறி வுறுத்தல்கள் வழங்கப்பட்ட நிலையில் அவ் அறிவுறுத்தல்களையும் மீறி சில விவசாயிகள் மேலதிக விதைப்புகளில் ஈடுபடுவதாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (நி-6-350)

# அம்பலப்பெருமாள் குள புனரமைப்புக்கு 60 மில். நிதி

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள் குளத்தில் கிராம அபிவிருத்தி தொடர்பான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

துணுக்காய் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராமத்தின் நீர்ப்பாசனம், வீதி, போக்குவரத்து போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இதன் போது நீர்ப்பாசனத்தில் அம்பலப்பெருமாள் குளத்தின் வேலைகள் அரை குறையாகக் காணப்படுவது தொடர்பாக கிராம மக்களினால் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இந்நிலையில் கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் சி.விகிர்தன் 60 மில்லியன் நிதி கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அதன் மூலம் குளத்தின் அணைக்கட்டு வேலைகளை விரைவில் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதே வேளை 1968 ஆம் ஆண்டு குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் காணிகளுக்கான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் பல காணிகளுக்கு இதுவரை காணி ஆவணங்கள் வழங்கப்படவில்லை என மக்களினால் தெரிவிக்கப்பட்ட நிலையில் காணி ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (நி-6-350)

# கஞ்சாவுடன் இருவர் சாவகச்சேரியில் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை 87 கிலோ கஞ்சாவுடன் ஒருவரும், அரைக் கிலோ கஞ்சாவுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்று அதிகாலை வேளை சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஏ32 வீதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கு அமைவாக வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் அரைக் கிலோ கஞ்சாவுடன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் கைதான நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கச்சாய் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அதிகாலை வேளையில் 87கிலோ கஞ்சாவுடன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

# அரச சேவைகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் உள்ளனர்

## கிளிநொச்சியில் அமைச்சர் மனுஷ

(முறிகண்டி)

**வடக்கில் உள்ள மக்கள் அரச சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சியில் நேற்று நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாடு பாரிய ஆபத்தான நிலையிலிருந்து மீண்டு வரும் நிலையில் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் சம்பள அதிகரிப்பு கோரி போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் வடக்கில் உள்ள மக்கள் வித்தியாசமாக சிந்திகின்றார்கள்.

தமக்கு கிடைக்க வேண்டிய அரச சேவைகள் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக அறிந்து கொள்வதுடன் அந்த விடயம் தொடர்பில் மாற்று சிந்தனையுடன் செயற்படுகின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டம் 80 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனியான மாவட்டமாக யாழ்ப்பாணத்திலிருந்து பிரிந்தது. துர்ப்பாக்கியமாக இந்த மாவட்டம் பிரிந்த காலப்பகுதியிலேயே யுத்தமும் ஆரம்பமானது. அதனால் இந்த மாவட்டத்திற்கு தேவையான அபிவிருத்திகளை முன்னெடுக்க முடிந்திருக்கவில்லை. யுத்தம் காரணமாக அதிகளவில் பாதிக்கப்பட்ட மக்களும் இங்கு உள்ள மக்களே எனத் தெரிவித்தார்.

(நி-6-100-315-316)

# ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலைக்கு இந்திய தூதரக அதிகாரி விஜயம்

## மீள இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



(முல்லைத்தீவு)

இந்திய தூதரக தலைமை அதிகாரி ராம் மகேஷ் நீண்ட காலமாக இயங்காத நிலையில் காணப்படும் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

நீண்டகாலமாக இயங்காத நிலையில் காணப்படும் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையினை விரைவாக மீள இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியத் தூதரக தலைமை அதிகாரியிடம் மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

ஓட்டுத் தொழிற்சாலையினை மீள இயங்கச் செய்வதன் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கக் கூடியதாக இருக்குமெனவும் இதன்போது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த கண்காணிப்பு விஜயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.எம்.எம் பாரிஸ் கலந்து கொண்டிருந்தார். (நி-6)




கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய துடுப்பாட்ட அணிக்கான சீருடையினை தொடுவானம் செயற்குழுமத்தால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. (படம்: கிருஸ்ணகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பாகம் - 3
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 532



"நோயாளி சுந்தர சோழனைச் 'சக்கரவர்த்தி' என்று இந்த வாய் ஒரு நாளும் சொல்லாது. நமது சக்கரவர்த்தியைப் பற்றித் தான் கேட்கிறேன்."

சௌக்கியமாயிருப்பதாகப் பத்து நாளைக்கு முன்பு செய்தி கிடைத்தது. ஆகா! எத்தனை நாள் ஆயிற்றுப் பார்த்து.

சரி,சரி! சீக்கிரம் புறப்படுங்கள். அந்த முட்டாள் பல்லவன் என்ன செய்யப் போகிறானாம்."

அவனையும் தஞ்சைக்கு அழைத்துப் போகிறோம். அவனிடம் ஜாக்கிரதையாக இருங்கள்.

அவனைப் பற்றிக் கவலையில்லை. நான் காலால் இட்டதை அவன் தலையால் செய்யக் காத்திருக்கிறான்!"

இருந்தாலும், ஜாக்கிரதையாயிருப்பது நல்லது. காஞ்சி ஒற்றன் வந்தியத்தேவனிடம் தாங்கள் கொஞ்சம் ஏமாந்து போனீர்கள் அல்லவா?"

அது உண்மைதான் அதனாலேயே அவனை உயிரோடு மறுபடியும் பார்க்க விரும்புகிறேன்."

அந்த ஆசையை அடியோடு விட்டுவிடுங்கள், ராணி! இவ்வாறு பேசிக் கொண்டே, அவர்கள் அங்கிருந்து நகரத் தொடங்கினார்கள் என்று தெரிந்தது. பூங்குழலி தன்னை அவர்கள் பார்க்காத வண்ணம் இன்னும் நன்றாய்ப் புதரில் மறைந்து கொண்டாள். நல்ல வேளையாக, அவள் இருந்த பக்கம் அவர்கள் வரவில்லை. வேறு திசையாகச் சென்று விட்டார்கள்.

பூங்குழலி தற்செயலாக ஒட்டுக்கேட்ட விடயங்கள் அவளுக்குப் பெருந்திகிலை உண்டு பண்ணிவிட்டன. பொன்னியின் செல்வரை எத்தனை வித அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன என்பதை எண்ணிய போது அவளுடைய கை கால்கள் நடுங்கின. கண்கள் இருண்டன தொண்டை வறண்டது உள்ளம் குழம்பியது. தான் விட்டு விட்டு வந்த படகை உடனே போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணம் மட்டும் வலியதாக முன் நின்றது படகை விட்டு வந்த திசையை நோக்கி விரைந்து சென்றாள்.

இளவரசர் கொடிய விஷசுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். அவரைச் சிறைப்படுத்திப் போவதற்குப் பழுவேட்டரையர் காத்திருந்தார். அவரைக் கொன்று விடுவதற்குக் கொலையாளிகள் காத்திருந்தனர். அவர்களுக்குத் துணையாக இந்தப் பெண்ணுருக் கொண்ட மோகினிப் பிசாசு இருந்தது. பார்த்திபேந்திரனும் அவளுடைய மாயவலையில் விழுந்து விட்டான். இளவரசரைத் தான் அழைத்துச் சென்று பத்திரமாய் வைத்திருக்கலாம் என்று எண்ணிய மறைந்த மண்டபம் கூட இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

இவ்வளவு அபாயங்களிலிருந்தும் இளவரசரைப் பாதுகாக்கும் பொறுப்புத் தன் தலையில் சுமந்திருப்பதாகப் பூங்குழலி உணர்ந்தாள். ஆகையினாலேயே அவளுடைய மூளை குழம்பிற்று. இதுகாறும் அவளுடைய வாழ்நாளில் என்றுமில்லாத ஓர் அனுபவம் நேர்ந்தது. அதாவது காட்டில் வழி தவறி விட்டோமோ என்ற பீதி உண்டாயிற்று.

சுற்றிச் சுற்றிப் புறப்பட்ட இடத்துக்கே வந்து கொண்டிருக்கிறோமோ' என்ற எண்ணம் தோன்றியது. அப்படிச் சுற்றிவரும்போது இளவரசரின் எதிரிகள் யாரேனும் எதிர்ப்பட்டு விட்டால் என்ன செய்வது? அவர்களுக்கு என்ன சமாதானம் சொல்வது? எப்படி அவர்களிடமிருந்து தப்பித்துச் செல்வது?

இல்லை, இல்லை! சரியான வழியிலேதான் வந்திருக்கிறோம். இதோ கால்வாய் தெரிகிறது. படகை விட்டு வந்த இடம் அதோ அந்த மூலையில் இருக்கிறது. பூங்குழலி அவ்விடத்தை நோக்கிப் பாய்ந்து ஓடினாள். அவளுடைய நெஞ்சு அடித்துக் கொள்ளாமல் நின்று விட்டது. ஏனெனில் அவள் விட்டிருந்த இடத்தில் படகைக் காணவில்லை!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கெடுவார், கேடு நினைப்பார்!

ஓர் காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுவில் ஒரு நீரோடை இருந்தது. அந்தத் தேளுக்கு இக்கரையில் இருந்து அக்கரைக்கு போக வேண்டி இருந்தது.

அக்கரைக்குப் போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, தவளை போன்றவைகளிடம் தேள் உதவி கேட்டது, ஆனால் அந்த பொல்லாத தேள் தமக்குக் கொட்டிவிடும் என்று அவை மறுத்து விட்டன.

எப்படி நீரோடையைக் கடப்பது என்று தேள் யோசித்துக் கொண்டு இருந்த போது அந்த நீரோடையில் ஆமை ஒன்று வந்து கொண்டிருந்தது.



ஆமையைக் கண்ட தேள்.

ஆமையாரே! நான் அக்கரைக்குச் செல்ல வேண்டும் என்னை அங்கு கொண்டு போய் விட்டு விடுவீரா? என்று கேட்டது.

நானும் அக் கரைக்குத் தான் போகிறேன், என் முதுகில் ஏறிக்கொள்ளும் உம்மை நான் அக்கரையில் விட்டுவிடுகிறேன்! என்றது ஆமை. தேளும் ஆமையின் முதுகில் ஏறிக் கொண்டது

ஆமை நீரில் நீந்திச் செல்ல அரம்பித்தது சிறிது தூரம் தான் ஆமை சென்றிருக்கும். தேளுக்கு ஒரு யோசனை வந்தது நான் பல பேரைக் கொட்டியிருக்கிறேன். அவர்கள் வலியால் துடித்ததையும் பார்த்திருக்கிறேன். ஆனால் நான் ஒரு நாளும் ஆமைக்கு கொட்டவில்லை, இந்த ஆமையைக் கொட்டினால் எப்படித் துடிக்கும்? இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடையாது.என்று ஆமைக்கு கொட்டிப் பார்க்க நினைத்தது

தேள் ஆமையின் முதுகில் கொட்டியது . ஆனால் ஆமை பேசாமல் போய்க் கொண்டிருந்தது. உடனே தேள் ஆமையைப் பார்த்து

ஆமையாரே! உமது முதுகு கடினமாக இருக்கிறதே. உமது உடம்பில் வலியே வருவதில்லையா? என்று கேட்டது.

தேளின் கெட்ட எண்ணத்தைப் புரிந்து கொள்ளாத ஆமை , எனது முதுகு கடினமான ஓட்டி னால் மூடப்பட்டுள்ளது அதனால் எனக்கு அந்த இடத்தில் வலியே வருவதில்லை, ஆனால் எனது கழுத்துப்பக்கம் மென்மையாக இருக்கும் . இதில் தான் எனக்கு வலிகள் காயங்கள் ஏற்படும் என்று சொன்னது ஆமை.

ஓகோ அப்படியா? என்று கேட்ட தேள் மெதுவாக ஆமையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்றது . கழுத்தில் இருந்து தலைப்பகுதிக்குச் சென்ற தேள் ஆமைக்கு கொட்ட ஆரம்பித்தது .

தலையில் ஏதோ குத்தியதால் விடுக்கென்று தலையை உள்ளே இழுத்துக் கொண்டது ஆமை. தேள் நீரோடையில் விழுந்து விட்டது.

தனக்கு உதவி செய்த ஆமைக்கு கேடு விளைவிக்க நினைத்த தேள் தண்ணீரில் மூழ்கி இறந்தது. ஆமை கரையை நோக்கி நீந்திச் சென்றது.

ஒருவர் எவ்வித பலனையும் எதிர்பாராமல் எமக்கு உதவி செய்தாராயின்,அவரின் உதவியை நாம், எம் வாழ்நாளில் என்றுமே மறந்து விடலாகாது.

அவருக்கு நன்றியுடையவனாக இருத்தல் வேண்டும். மாறாக அவ ருக்கு கெடு செய்ய நினைப்போமாயின், அது எம்மையே வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள். ஏனென்றால் பொய் வாழ விடாது. உண்மை சாக விடாது. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதேச வைத்தியசாலைகளை செழுமைப்படுத்துங்கள்

அண்மைக்காலமாக வைத்தியசாலைகள் பற்றியே பொதுமக்கள் கலந்துரையாடி வருகின்றனர்.

இவ்வாறு பொதுமக்கள் முன்னுரிமை கொடுத்துக் கதைப்பதற்கு அவர்களிடம் தக்க நியாயங்கள் உண்டு.

எனினும் கதைப்பது மட்டும் வைத்தியசாலைகளின் இயங்குநிலைகளைச் சீராக்கி விடுமா? என்றால், இல்லை என்பதுதான் அதற்கான பதிலாகும்.

இதை நாம் கூறும்போது, அப்படியானால் என்ன செய்வது என்ற கேள்வி எழும்.

இங்குதான் இருளைக் குறை சொல்லாதீர்கள். விளக்கை ஏற்றுங்கள் என்ற ஆங்கிலேயர்களின் முதுமொழி நினைவுக்கு வருகிறது.

ஆம், நாம் எல்லோரும் கதைப்பது இருளைப் பற்றியதாக இருக்கிறது.

இருளைப் பற்றி நீங்கள் எவ்வளவுதான் கதைத்தாலும் இருள் நீங்கப் போவதில்லை.

மாறாக, இருளை இல்லாதொழிக்க வல்ல ஒளியை ஏற்றுவதுதான் ஒரே வழி.

இங்குதான் இருளைக் குறை கூறுகின்றவர்கள் இருளைக் குறை கூறிக் கொண்டிருக்கிறார்களேயன்றி, ஒளியை ஏற்றுகின்ற பணியைச் செய்வதாக இல்லை.

ஆம், எங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் மிக நீண்ட நெடுங்காலமாக இயங்கி வருகின்ற பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் ஆதார வைத்தியசாலைகள் சீராக இயங்குமாயின், நோயாளர்களில் 75 சதவீதமானவர்கள் அந்தந்த வைத்தியசாலைகளிலேயே சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதேச வைத்தியசாலைகள் செம்மையாக இயங்காதவிடத்து, ஆரம்ப நிலைகளில் நோயை இனங்காணுகின்ற சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது.

இங்குதான் நோய் முற்றிய நிலையில் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலைகளை நோயாளர்கள் நாடுகின்றனர்.

நோய் முற்றிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்களுக்கான சிகிச்சைகள், அவர்களுக்கான மருந்துகள், அறுவைச் சிகிச்சைகள் என விரிவடையும்போது அவர் பொருட்டு மருத்துவர்கள் மற்றும் இதர மருத்துவப் பணியாளர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள், சத்திரசிகிச்சை செய்வதற்கான நேர ஒதுக்கீடுகள் என ஏகப்பட்ட பிரச்சினைகள் முன்னெழுகின்றன.

அதிலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அங்கு நிலைமை மோசமாகிறது.

எனவே பிரதேச வைத்தியசாலைகளை செழுமைப்படுத்தி அங்கு சிகிச்சை வசதிகளை அதிகரிக்கும்போது, போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் கட்டுக்கடங்காமல் போகின்ற நிலைமை முறியடிக்கப்படும்.

எனவே ஒவ்வொரு பிரதேச வைத்தியசாலைகளும் செம்மைப்படுத்தப்பட வேண்டும். இதைச் செய்வதற்கு நோயாளர் நலன்புரிச் சங்கங்களை உருவாக்கி அதன்மூலம் கொடையாளிகளிடம் இருந்து உதவிகளைப் பெற்று வைத்தியசாலைகளை சீர்படுத்தும்போது, ஏகப்பட்ட பிரச்சினைகள் தானாகத் தீர்ந்து போகும்.

# ஓரணியில் நின்று தமிழர் வாக்குகளை பலப்படுத்தி பேரம்பேசும் சக்தியாக மாறுங்கள்

## கூட்டமைப்புக்கு இந்திய உயர்ஸ்தானிகர் ஆலோசனை

2005 ஆண்டுக்கு பின்னர் தமிழர் தரப்புக்கு பேரம்பேசக்கூடிய ஒரு களமாக இந்த ஜனாதிபதித் தேர்தல் சந்தர்ப்பமாக இருப்பதாகவும் இதனை சரியாக பயன்படுத்த வேண்டும் என்றும் எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு தமிழர்தரப்பு வாக்குகளை பயன்படுத்தி ஒரு உடன்படிக்கை செய்து தமிழர்பிரச்சினை தீர்ப்பதற்கு முயற்சிக்கலாம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆலோசனை வழங்கியுள்ளார்

இந்திய உயர்ஸ்தானிகருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்று நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை, ஜனாதிபதித் தேர்தல், பொது வேட்பாளர் விடயம் மேலும் நில அபகரிப்பு, மீனவர்கள் பிரச்சினை, அரசியல் பொருளாதார பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

மாகாணசபைத்தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்றும் வட கிழக்குப் பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் சம்மந்தமாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

இது குறித்து இந்தியத் தூதுவர் பதிலளிக்கையில், வடக்குக் கிழக்கில் நடைபெறுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் நடைபெறும் வட பகுதி மீனவர்களுக்கு கடற்தொழில் அமைச்சர் ஊடாக அவர்களுக்கான கடற்தொழில் உபகரணங்கள் நிவாரணங்கள் இந்திய அரசால் வழங்கப்பட உள்ளதாகவும் கூறினார். (ந-7)

## ஆலயத்தில் களவுபோன நகைகளை மீட்டுத்தர வேண்டும்

### புளியங்கூடலில் மக்கள் பேரணி

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயத்தில் சுமார் 60 பவுண்களுக்கு மேற்பட்ட நகைகள் காணாமல் போனமை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் புளியங்கூடல் சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணி பிரதான வழியாக இந்தன் முத்து விநாயகர் ஆலயத்தை சென்றடைந்தது.

ஆலயத்தின் முகவாயிலில் சிதறு தேங்காய் உடைத்து பிள்ளையாரின் நகை பணம் திருடியவர்களை வீதிக்கு கொண்டு வா என கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் களவுபோன ஆலயத்தின் நகைகளை மீட்டுத்தருவதற்கு பொலிஸார் உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஊர்வலத்தில் பங்கு பற்றியவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-7)

## நல்லினப் பசுக்களை வழங்க இந்தியா, பாகிஸ்தான் இணக்கம்

(கொழும்பு)

இலங்கையில் பசும் பால் உற்பத்தித் தொழிலை மேம்படுத்துவதற்காக பசுக்களை வழங்குவதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் இராஜதந்திர மட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளன.

தற்சமயம் நாட்டில், பசும்பால் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் அதிகளவான பாலைப் பெறக்கூடிய பசுக்கள் இல்லாதது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே இது குறித்து இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதற்கிணங்க, இந்தியா சாஹிவால் என்ற இனப் பசு மாடுகளையும், பாகிஸ்தான் முரா என்ற வகை எருமை மாடுகளையும் இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

இலங்கையின் காலநிலைக்கு ஏற்ற பசுக்கள் மற்றும் எருமைகள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மட்டுமே காணப்படுகின்ற தாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு, சில ஆண்டுகளுக்கு முன்பு, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டாலும் அந்தத் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ந-7)

## ஜனாதிபதித் தேர்தலை விரைந்து நடத்துங்கள்

### தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிர்க்கட்சி எம்.பிகள் கடிதம்

ஜனாதிபதித் தேர்தலை சாத்தியமான ஒரு நாளில் விரைந்து நடத்துமாறு கோரி எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தேர்தலை சுதந்திரமான மற்றும் நியாயமான சூழ்நிலையில் நடத்துவதற்கு அதிகபட்ச சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர். (ந-7)

## பெற்றோரே மதுவை கைவிடுங்கள்!

## பிள்ளைகள் உங்களையே பின்பற்றி வளர்கின்றனர்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

பெற்றோர்கள் மதுவைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோரைப் பின்பற்றுகிறார்கள். எனவே இந்த விடயத்தில் பெற்றோர்கள் கூடிய கவனம் செலுத்தி நடந்து கொள்ள வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துரைக்கையில்,

சகல பாடசாலை மாணவர்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகாது நடுநிலை சிந்தனையோடு செயற்பட வேண்டும். நேரிய சிந்தனையோடு பாடசாலைப் பிள்ளைகள் வளர வேண்டும். மதுபானம், போதைப்பொருள் மற்றும் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகக் கூடாது. மதுப் பழக்கம் ஒரு நாகரீகமற்ற செயல்.

மாணவர்கள் சரியானதைச் செய்து சரியான பாதையில் செல்ல வேண்டும். பெரியவர்களை மதிக்க வேண்டும். பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் பிரவேசித்து ஸ்மார்ட் கல்வியை முன்னெடுக்க வேண்டும். கல்வி எனும் பெறுமதி மிக்க வளத்தை எவராலும் ஒருபோதும் திருட முடியாது. எனவே பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியையும் நல்ல நாகரீக வாழ்க்கையும் அமைத்துக் கொடுக்க சகலரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (ந-7)

## பேருந்திலிருந்து தவறி விழுந்த ஆசிரியர் படுகாயம்

(சாவகச்சேரி)

பேருந்தில் இருந்து தவறி விழுந்த ஆசிரியர் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் - பூநகரி 15 ஆம் கட்டை சந்திப்பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாவிக்கு சென்ற இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த குறித்த ஆசிரியர், பேருந்து பூநகரி பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென நிலைதடுமாறி பேருந்தின் பின்கதவால் கீழே விழுந்துள்ளார்.

இதனால் தலையில் பலத்த காயம் அடைந்த குறித்த ஆசிரியர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

17

### குல்னா பிரதேசத்தில் நடந்த இந்துகளுக்கு எதிரான தாக்குதல்கள்

ஜெஸ்ஸூர் மாவட்டத்தின் அபய் நகர் உபாசிலாவில், ஜனவரி 5, 70 அன்று காலை 10 மணியளவில், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 80 இற்கும் மேற்பட்ட எதிர்க்கட்சித் தொழிலாளர்கள், ஐந்து இந்து ஆண்களை வாக்களித்ததற்காக வெட்டினர். பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டதால், தாக்குதல் நடத்தியவர்கள் பயங்கரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என மிரட்டிவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

மாலை 6 மணியளவில், ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியைச் சேர்ந்த சுமார் 250 தொழிலாளர்கள், கூரிய ஆயுதங்கள் மற்றும் தடிகளுடன், இந்துக்கள் வசிக்கும் மலோபரா கிராமத்தைத் தாக்கினர், அங்கு அவர்கள் 130 வீடுகளை நாசமாக்கி மேலும் 10 வீடுகளை தீயிட்டுக் கொளுத்தினர்.

ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் இஸ்லாமி சத்ரா ஷிபிரின் ஆர்வலர்கள் துப்பாக்கிகள், கத்திகள், இரும்பு கம்பிகள் மற்றும் தடிகளுடன் இந்துக்களை துரத்தினார்கள், அப்போது அவர்களில் சுமார் 100 பேர் பைரப் ஆற்றில் குதித்து மறுகரைக்கு நீந்திச் சென்றனர்.

இந்துக்களுக்குச் சொந்தமான தென்னை, வாழை மரங்கள் வெட்டப்பட்டன அல்லது எரிக்கப்பட்டன. மாட்டுத் தொழுவங்கள் எரிக்கப்பட்டன. சிலைகள் அவமதிக்கப்பட்டன. தாக்குதலில் குறைந்தது 20 பேர் காயமடைந்தனர். இக்கிராமத்தைச் சேர்ந்த சுமார் 600 இந்துக்கள் பைரப்பை நீந்திக் கடந்து ஸ்ரீதர் ஒன்றியத்துக்குட்பட்ட தியாபரா கிராமத்தில் தஞ்சம் புகுந்தனர்.

ஜனவரி 7 அன்று இரவு, ஜெஸ்ஸூர் மாவட்டத்தில் உள்ள மணிராம்பூர் உபாசிலாவின் ஹஜ்ரயில் ரிஷிபல்லியில் இரண்டு இந்து வீடுகளில் முகமூடி அணிந்த நபர்கள் சோதனை நடத்தினர். அவர்கள் ஆண்களை பணயக் கைதிகளாக பிடித்து இரண்டு இல்லத்தரசிகளை கூட்டு பலாத்காரம் செய்தனர்.

பாகர்ஹாட் மாவட்டத்தில், மோரல்கஞ்ச் உபாசிலவில் உள்ள கச்சுபுனியாவில் ஒரு ராதா கோவிந்தா கோயிலும் ஒரு காளி கோயிலும் ஜனவரி 8 அன்று இரவு தீவைக்கப்பட்டன. ஜனவரி 9 அன்று ராமச்சந்திராபூர் ராதாகோபிந்தா செபாஷ்ரம் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஷிமா கோவில் ஆகியவை இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் எரிக்கப்பட்டன.

பாகர்ஹாட் மாவட்டத்தில் மீண்டும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மோரல்கஞ்ச் உபாசிலாவில் உள்ள ராதாகோபிந்தா கோவிலின் சரஸ்வதி பூஜை மண்டபத்தை ஜனவரி 16 அன்று எரித்தனர்.

மகுரா மாவட்டத்தில், ஜனவரி 10 அன்று மகுரா சதர் உபாசிலாவில் உள்ள மகுரா நகரத்தின் சத்தோஹா பகுதியில் உள்ள இரண்டு இந்து கோவில்களில் தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் திருடப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீ நெங்டா பாபர் ஆசிரமத்தின் இரண்டு கோவில்களுக்குள் அதிகாலையில் புகுந்த மர்மநபர்கள் தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் மற்றும் நன்கொடை பெட்டியில் இருந்த பணத்தை எடுத்துச் சென்றனர்.

சத்கிரா மாவட்டத்தில், ஜனவரி 5 ஆம் திகதி இரவு இந்துக்களுக்குச் சொந்தமான 46 வீடுகள் மற்றும் நிறுவனங்கள் சேதப்படுத்தப்பட்டன, மேலும் ஆறு வீடுகள் தீ வைக்கப்பட்டன. அவாமி லீக்கிற்கு இந்துக்கள் வாக்களித்ததாக குற்றவாளிகள் குற்றம் சாட்டினர்.

### ரங்பூர் பிரதேசத்தில் நடந்த இந்துகளுக்கு எதிரான தாக்குதல்கள்

ஜனவரி 5 அன்று காலை, நூற்றுக்கணக்கான எதிர்க் கட்சித் தொழிலாளர்கள், தினாஜ்பூர் மாவட்டத்தின் சதர் உபாசிலாவில் உள்ள கோர்னாய் கிராமத்தைத் தாக்கினர். இந்துக்களுக்குச் சொந்தமான எட்டு கடைகளையும், 12 இந்து வீடுகளையும் சூறையாடி, தீ வைத்து எரித்தனர்.

ஜனவரி 7 அன்று இரவு, பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமியின் செயற்பாட்டாளர்கள் கைபந்தா மாவட்டத்தில் உள்ள கைபந்தா சதர் உபாசிலாவின் குப்டோலா யூனியனில் இந்துக்களுக்குச் சொந்தமான இரண்டு வீடுகள் மற்றும் ஐந்து கடைகளை அழித்துள்ளனர். இந்த தாக்குதலில் 5 பேர் காயமடைந்தனர்.

லால்மோனிர்ஹாட் மாவட்டத்தில், எதிர்க் கட்சிகளின் அச்சுறுத்தல்களாலும், நிர்வாகத்தின் பாதுகாப்பின்மையாலும் இந்துக்கள் வாக்களிப்பதில் இருந்து பெருமளவில் விலகினர். லால்மோனிர்ஹத் பூஜா உத்ஜபன் பரிஷத்தின் பொதுச் செயலாளர் கருத்துப்படி, மாவட்டத்தில் 4-5% இந்துக்கள் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

ஷஃபிநகர் மற்றும் சென்பரா கிராமங்களில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட இந்துக் குடும்பங்கள் தேர்தலுக்குப் பிறகு ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் இஸ்லாமி சத்ரா ஷிபிரால் அச்சுறுத்தப்பட்டன. ஜனவரி 8 ஆம் திகதி, ஷாபி நகரில் உள்ள ஒரு இந்து கோவில் பராமரிப்பாளரின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டது.

தாகுர்கான் மாவட்டத்தில், கோபால்பூர் கிராமத்தைச் சேர்ந்த 500 இந்துக் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1,200 இந்துக்கள் இஸ்கான் கோயிலில் தஞ்சம் புகுந்தனர்.

### பாரிசல் பிரதேசத்தில் நடந்த இந்துகளுக்கு எதிரான தாக்குதல்கள்

பாரிசல் மாவட்டத்தில், ஒரு இந்து குடும்பம் அவர்களது வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். இவ் வீடு அகயில்ஜாரா உபாசிலாவின் தானேஷ்வர்கத்தி கிராமத்தில் அமைந்துள்ளது. அப்போதைய அரசாங்கக் கட்சியான அவாமி லீக்கின் ஜூபோ லீக் உறுப்பினர் ஒருவர் பயங்கரவாத கும்பலுடன் திரு.தபன் சர்க்கரின் வீட்டைக் கைப்பற்றப் போயிருந்தனர். பின்னர் அவர்கள் திரு.தபன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை அடித்தனர். அதன் பிறகு குடும்பத்தினர் அருகில் உள்ள ஆரம்பப் பள்ளியின் ஒதுக்கப்பட்ட வகுப்பறையில் தஞ்சம் புகுந்தனர்.

பிரோஜ்பூர் மாவட்டத்தின் பண்டாரியா உபாசிலாவில், ஜனவரி 5 ஆம் திகதி பங்களாதேஷின் தேசியத் தேர்தலுக்குப் பிறகு, ஜனவரி 12 அன்று இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பழமையான துர்கா கோயிலை எரித்தனர். அந்த அடிப்படைவாதிகள் அந்த கோவிலை எரித்து சாம்பலாக்கினார்கள்.

23 பெப்ரவரி 2014 அன்று, தேசிய ஆங்கில நாளிதழான டெய்லி ஸ்டார், நாட்டின் உயர் நீதிமன்றத்தில் காவல்துறை அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட சுருக்கமான அறிக்கையை வெளியிட்டது.

இந்த அறிக்கையின்படி, ஜனவரி 5 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு 21 மாவட்டங்களில் இந்துக்கள் மீதான 160 தாக்குதல்கள் மற்றும் அட்டூழியங்கள் நடந்துள்ளன, இதனால் 4 மில்லியன் மதிப்புள்ள இந்து சொத்துக்கள் இழப்பு ஏற்பட்டது.

இத்தகைய அட்டூழியங்களில் இந்து மக்களை காயப்படுத்தியது, அவர்களது வீடுகள், கோவில்கள் மற்றும் வணிக நிறுவனங்களை சேதப்படுத்தியது மற்றும் தீ வைப்பது மற்றும் மதிப்புமிக்க பொருட்களை சூறையாடுவது போன்ற 70 தாக்குதல்களில் சுமார் 4 மில்லியன் இழப்புகளை ஏற்படுத்தியது.

இந்தியாவில், வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சி கவலை தெரிவித்தது.

இந்துக்கள் உட்பட சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்களை தண்டிக்க சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க பங்களாதேஷ் அரசாங்கம் முடிவு செய்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளை விசாரிக்க சட்ட அமைச்சு உச்ச நீதிமன்றத்தில் ஆலோசனை நடத்தியது.

### 2016 நசீர்நகர் வன்முறை

2016 நசீர்நகர் வன்முறை என்பது பங்களாதேஷின் நசிர்நகர் உபாசிலாவில் உள்ள சிறுபான்மை இந்து சமூகத்தின் மீது இஸ்லாமிய தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலாகும். இது 30 ஒக்டோபர் 2016 அன்று ஒரு இந்து மீனவரால் இஸ்லாத்திற்கு எதிராக அவதூறான சமூக ஊடகப் பதிவின் காரணமாக ஏற்பட்டது. இந்தத் தாக்குதலில் 19 கோவில்கள் சேதமாக்கப்பட்டன. மற்றும் ஏறக்குறைய 300 வீடுகள் சேதப்படுத்தப்பட்டன மற்றும் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

2022 ஆம் ஆண்டில், சுதந்திர இல்லம் பங்களாதேஷின் மத சுதந்திரத்தை 4 இல் 2 என மதிப்பிட்டது, சிறுபான்மைக் குழுக்களின் உறுப்பினர்கள் - இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் மற்றும் ஷியைட் மற்றும் அஹ்மதியா முஸ்லீம்கள் - அவர்கள் மீதான கும்பல் வன்முறை உட்பட துன்புறுத்தல் மற்றும் வன்முறையை தொடர்ந்து எதிர் கொள்கின்றனர். என்று குறிப்பிட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நேற்றும்...

தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட அகழ்வு பணியின்போது நேற்றுடன் 45 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் எட்டாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் உத்தியோகத்தர் மத்தீவ் கின்சன் மற்றும் காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுளந்த , பணிப்பாளர் ஜெ.தற்பரன் உள்ளிட்டவர்களும் குறித்த அகழ்வுப் பணி இடத்தினை நேற்று பார்வையிட்டுச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந-7,299)

மஹஜன சம்பத
திகதி 2024.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 5532
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 3 6 5 8 5 0
அத சம்பத
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 5 8 5 0
சீட்டிழுப்பு இலக்கம் 107
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1562
I 07 22 56 68 I
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 50148
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 12/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1880
E 08 23 49 56 70
Double Chance 41959
தேசிய லொத்தர் சபை

லக்கி 7 VIP
திகதி 2024.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 358
S 9 8 9 3 8 2 S
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3774
சீட்டிழுப்பு திகதி 12.07.2024
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 03 26 44 75
D 11609
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 0841
சிம்மம் 20 29 30 51 சிம்மம்
45865 24

## ஜனாதிபதித்...

மையினால் ஜனாதிபதித் தேர்தலை தேர்தல் ஆணைக்குழுவினால் நடத்த முடியுமா? என பல தரப்பினர் கேள்வி எழுப்பியுள்ள நிலையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேவையான நிதி எங்களிடம் உள்ளது. மேலும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எங்களிற்கு சட்டபூர்வமான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலை சுமூகமாக நடத்துவது குறித்து சட்ட அமுலாக்கல் தரப்பின் அதிகாரிகள் மற்றும் தொடர்புபட்ட ஏனைய தரப்புடன் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம்.

எதிர்வரும் புதன்கிழமை நிதிய மைச்சின் அதிகாரிகளை சந்திக்கவுள்ளோம்.

ஜூலை 14ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்பதற்கான அதிகாரம் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ள அவர் மாத இறுதியில் அறிவிப்பு வெளியாகலாம் என தெரிவித்துள்ளார். (ந-7)

## யாழில்...

யாப்பா பண்டார தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்துப் பாராளுமன்றில் மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் யாழ்ப்பாணத்தில் இன்று (நேற்று) இரவு இசைக்கச்சேரி ஒன்று நடத்தப்படுகின்றது.

குறித்த இசை நிகழ்விற்காக இந்தியாவிலிருந்து கலைஞர்கள் வருகை தந்துள்ளார்கள். இசை நிகழ்விற்காக 90 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஹட்டனிலும் இவ்வாறான இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இளைஞர் சேவை மன்றம் என்ற ரீதியில் இவையா? செய்யவேண்டும். இவ் இசைநிகழ்விற்கு பணம் ஒதுக்கியது யார்? இதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதான இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலதிக ஒதுக்கீடாக 400 மில்லியன் ரூபாய் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கு எவ்வாறு இவ்வளவு பணத் தொகையை செலவிட முடியும்.

அரச நிறுவனங்களால் பல்வேறு நிகழ்வுகளுக்காக செலவிடும் பணத் தொகையை நிறுத்துமாறு திறைசேரி அமைச்சின் செயலாளரால் சுற்று நிருபம் வெளியிட்டுள்ளது. நாங்கள் வங்குரோத்து அடைந்த நாட்டில்தான் இருக்கின்றோம்.இவ்வாறு இருக்கும் போது வீணாகப் பணத்தினை செலவிட வேண்டாம். இதை இளைஞர்களுக்காக பயன்படுத்த முடியும்.

அதேவேளை, தம்புள்ள சர்வதேச விளையாட்டரங்கிலும் இவ்வாறு இசைக் கச்சேரி இடம்பெற்றது. அதற்கு 88 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. குளியாப்பிட்டியில் 200 மில்லியன் செலவில் இசைக் கச்சேரி இடம்பெற்றது.

குறித்த இசைநிகழ்வால் மைதானம் முழுமையாக சேறாக மாறியது. அதேவேளை, வலுது குறைந்த

நிலையில் உள்ள இராணுவத்திற்கான கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த நாட்டிற்காக தான் போராடி கை கால்களை இழந்துள்ளார்கள்.

இலட்சக்கணக்கில், மில்லியன் கணக்கில் வீணாகப் பணத்தை செலவழிக்காது முக்கியமான விடயத்திற்கு இதனை வழங்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார். (ந-7)

## படையினரின்...

யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரத்து 624 ஏக்கர் தனியார் காணிகளும் 951 ஏக்கர் அரச காணிகளும் இன்னமும் படையினர் வசம் உள்ளன.

இதில் தனியார் காணிகளில் இராணுவத்தினரிடம் ஆயிரத்து 775 ஏக்கரும் விமானப் படையினரிடம் 660 ஏக்கரும் கடற்படையினரிடம் 160.67 ஏக்கரும் பொலிஸாரிடம் 28 ஏக்கரும் உள்ளன.

இதேபோன்று அரச காணிகளில் இராணுவத்தினரிடம் 416.66 ஏக்கரும் விமானப் படையினரிடம் 349.82 ஏக்கரும் கடற்படையினரிடம் 179.70 ஏக்கரும் பொலிஸாரிடம் 10.34 ஏக்கரும் உள்ளன. இதற்கமையவே யாழ். மாவட்டத்தில் தற்போதும் 3 ஆயிரத்து 571 ஏக்கர் காணிகள் படையினர் வசம் உள்ளன என்று பிரதமர் தினேஷ் குணவர்தனவின் கவனத்துக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் கொண்டு வந்தார். (ந-7)

## 165...

நிரந்தர நியமனக் கடிதங்களை பிரதமர் தினேஷ் குணவர்த்தன வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வு யாழ்.பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. (ந-7)

## அரி...

பாத்தி மயானத்திற்கு முன்பாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது .

சம்பவம்தொடர்பில் தெரியவருவதாவது,

ஞைகதடிப்பகுதியில் குறித்த பேருந்தில் ஏறிய இருவர் அரியாலையில் இறங்கிய போது [illegible]

## ஒன்லைன் ஊடாக பண மோசடி

### சந்தேகநபர்கள் இருவர் கைது

ஒன்லைன் ஊடாக பண மோசடியில் ஈடுபட்ட 2 சந்தேகநபர்களை கொம்பனித்தெரு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்பொருள் அங்காடியொன்றில் பணப்பரிசு வெற்றி கொண்டுள்ளதாக தெரிவித்து சந்தேகநபர்கள் 180,000 ஆயிரம் ரூபாய் பண மோசடி செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 7 கையடக்கத் தொலைபேசிகளும் அவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 109 சிம் அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.(ந-7)

டன் முரண்பட்டுள்ளனர். இதில் நியாயம் கேட்க சென்ற சாரதி மற்றும் பயணி மீதே வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,33)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
12.07.2024 வெற்றி வாரம் 240 வர்ணம் இள இளஞ்சிவப்பு
ஆங்கில எழுத்து H
9 2 6 3 4 9
57233
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,475,520.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2506 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 12.07.2024 தினம் வெள்ளி
வெற்றி இலக்கங்கள் 10 44 48 67 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,440,016.00
DLB

சனிதா
திகதி 2024.07.12 வெற்றி வாரம் 4667 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 14 44 63 70 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,936,488.40
ரூ. 100,000/- பணப்பரிசு 17493
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 501 வெற்றி இலக்கங்கள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.12 11 16 49
பச்சை 07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,746,280/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4218 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.07.12 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 10 36 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,655,452.80
287546
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 18 05 36 40 47
சீட்டிழுப்பு 1682 இள கபில 12.07.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 532,776,445.40
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2332
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
சீட்டிழுப்பு திகதி : 2024.07.12
07 25 28 35 J
983390
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சிவபூமி
SIVA POOMI

# வட்டுக்கோட்டை சிவபூமி தேவார மடம்

## திறப்பு விழா அழைப்பிதழ்

காலம்:- 14.07.2024, ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மாலை 03.30 மணி
இடம் :- அராலி, தெல்லிப்பழை பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
(வட்டுக்கோட்டை பொதுச்சந்தை முன்பாக)

கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக இறையருளாலும் அன்பர்கள் ஆதரவாலும் சிவபூமி அறக்கட்டளை எம் மண்ணில் சமய சமூகப் பணிகளையாற்றி வருவதை பலரும் அறிவீர்கள். நமது அறக்கட்டளைக்கு வட்டுக்கோட்டை தெல்லிப்பழை பிரதான வீதியில், திரு.தி.பாலசுப்பிரமணியம் அவர்களின் நினைவாக அவரது குடும்ப உறுப்பினர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இல்லத்தை புனரமைத்து இப்புண்ணியப் பணியை ஆரம்பிக்கிறோம். திருமுறைகளை சிறுவர்கள் கற்பதற்கும் சைவ நெறிமுறைகளை வளர்ப்பதற்கும் இத்திருமடம் என்றும் பயன்தர இறையருளை வேண்டுகிறோம். இவ் இனிய விழாவிற்கு தாங்கள் குடும்பமாக வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**நிகழ்வுகள்**

**திருமுறை வழிபாடு**

**வரவேற்புரை**
திரு.ம.தயாகரன் (இணைச் செயலாளர் - சிவபூமி அறக்கட்டளை)

**ஆசியுரை**
சிவஸ்ரீ.ஐயா.வாசுதேவக் குருக்கள் (சித்தங்கேணி)
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
ஸ்ரீ.மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள் (தர்மபுரம் ஆதீன திருக்கேதீஸ்வர மடம்)

**தலைமையுரை**
செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் (தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

**பிரதம விருந்தினர் உரை**
கௌரவ நீதியரசர் உயர்திரு ஸ்ரீ.சிவஞானம்
(சென்னை உயர்நீதிமன்றம் - தமிழ்நாடு)

**சிறப்பு விருந்தினர் உரை**
திரு. ராம் மகேஸ்
(அதிகாரி - இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாணம்)
திருமதி. கவிதா உதயகுமார் (பிரதேச செயலாளர் - வலி மேற்கு சங்கானை)
திரு. ய. அனிருத்தன்
(பணிப்பாளர் - இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சு)

**சிறப்புரை**
திரு. உமாகரன் இராசையா
(சட்டத்தரணி)

**சிறப்பு கலை நிகழ்ச்சிகள்**
திருமுறை நடன ஆற்றுகை (பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவிகள்)

**நன்றியுரை**
திரு. பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன்
(இணைச் செயலாளர் - சிவபூமி அறக்கட்டளை)

(நிர்வாக சபை - சிவபூமி அறக்கட்டளை, இலங்கை)

(1438)

---

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-780)

---

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-780)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

---

## தேவை

மானிப்பாயில் இயங்கும்
அரைக்கும் ஆலை
ஒன்றிற்கு(மில்)
வேலைக்கு ஆள் தேவை.
தொடர்புகளுக்கு:
076 619 2229
(1458)

---

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள
நிரந்தரகுடியுரிமையுடனான 15'000
Care Giver வாய்ப்புக்களுக்கான
சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன்
Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-780)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

---

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 255/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)2Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அவல் | - 260/= | |
| 1 Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 1kg கட்டி உப்பு | - 80/= | ~~115/=~~ |
| 180ml Chik சம்போ | - 360/= | ~~480/=~~ |
| 70g பேபி சோப் | - 110/= | ~~145/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 729/= | ~~780/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |
| 750g சுபோஷா சத்துமா | - 560/= | ~~590/=~~ |
| 500ml விம் Liquid | - 310/= | ~~375/=~~ |

Max 02
400g Anchor
1020/=

~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(0154)
Happy Supermarket
0777 8080 30

---

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்ஷனின்

ஆடி மாத ஆடைத் தள்ளுபடி



- திருமணப் பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள் சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான
- ஆடைத் தெரிவுகள்...

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : 12.07.2024 - 06.08.2024 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
(1459)

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில்
73 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 2வது காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம் (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389, 077 986 5457
(1465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல. 191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.